## தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்
## &
## இந்தியவானிலைத்துறை
## வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம், கோவை
## ஈரோடு மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை
## (05. 02.2022 முதல் 09. 02. 2022 )

**அறிக்கைஎண் 010/2022** **தேதி. 04 02 2022**

**மாநிலத்தின் கடந்தவார வானிலை**

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 30°செ முதல் 35°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 19°செ முதல் 25°செ ஆகவும், கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 19°செ முதல் 23°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 06°செ முதல் 10°செ ஆகவும் பதிவானது. தமிழகத்தில் தூத்துக்குடி மாவட்டத்தில் இலேசான தூறல் மழையே பெறப்பட்டது. மற்ற மாவட்டங்களில் வறண்ட வானிலையே காணப்பட்டது

**ஈரோடு மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**

| கடந்தவாரவானிலை (30. 01. 2022 முதல் 03.02. 2022) | | | | | | அடுத்தஐந்துநாட்களுக்கானவானிலை முன்னறிவிப்பு -09. 02.2022- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 30/01 | 31/01 | 01/02 | 02/02 | 03/02 | தேதி | நாள் -1 05/02 | நாள்-2 06/02 | நாள்-3 07/02 | நாள்-4 08/02 | நாள்-5 09/02 |
| 0.0 | 0.0 | | | | மழை (மி.மீ) | 0 | 0 | 0 | 0 | 0 |
| 30 | 31 | 33 | 32 | 33 | அதிக பட்ச வெப்பநிலை (°செ) | 33 | 33 | 34 | 34 | 34 |
| 22 | 22 | 22 | 20 | 20 | குறைந்த பட்ச வெப்பநிலை (°செ) | 20 | 20 | 20 | 21 | 21 |
| 6 | 6 | 4 | 5 | 5 | மேக மூட்டம் (ஆக்டா) | 5 | 5 | 5 | 5 | 5 |
| 77 | 86 | 84 | 83 | 74 | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 85 | 85 | 85 | 80 | 80 |
| 51 | 43 | 38 | 36 | 43 | குறைந்தபட்சகாற்றின்ஈரப்பதம் (%) | 45 | 45 | 45 | 40 | 40 |
| 11 | 11 | 9 | 7 | 11 | காற்றின் வேகம் (கி.மீ/மணி) | 8 | 8 | 8 | 8 | 8 |
| 50 | 50 | 90 | 70 | 180 | காற்றுவீசும் திசை | 180 | 90 | 90 | 90 | 90 |

**எதிர்பார்க்கப்படும் வானிலை ஈரோடு (05..02. 2022 முதல் 09..02.2022)**

வரும் நாட்களில் வானம் பெரும்பாலான மேக மூட்டத்துடன் காணப்படும். அடுத்து வரும் நாட்களுக்கு வறண்ட வானிலையே எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 33°செ முதல் 34°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 20°செமுதல் 21°செ ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம் 80 முதல் 85 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 40 முதல் 45 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 8 கி.மீ வேகத்தில், பெரும்பாலும்

.

**வேளாண் அறிவுரை**

| | | |
|---|---|---|
| **,பொது அறிவுரை** | | அடுத்த 5 நாட்களுக்கு மேற்கு மண்டல மாவட்டங்களில் வறண்ட வானிலையுடன் வெப்பநிலை உயரவும் வாய்ப்பள்ளது.. எனவே அனைத்துப் பயிர்களுக்கும் மண் ஈரத்தினைப் பொறுத்து நீர் பாய்ச்ச வேண்டும்.<br>வறண்ட வானிலையே எதிர்பார்க்கப்படுவதால் அறுவடை செய்த தானியங்களை காய வைத்து தக்க முறையில் சேமிக்கவும்.<br>அறுவடை முடிந்த நிலத்தினை கொத்து அல்லது சட்டிக் கலப்பை கொண்டு உடனடியாக உழுவதன் மூலம் களைகளை கட்டுப்படுத்துவதுடன் கோடை கால மழையின் ஈரப்பத்ததை சேகரிக்கலாம்.<br>பயிர் கழிவுகளை எரிக்காமல், நிலத்தில் உழுவதன் மூலம் பயிர் கழிவுகள் எளிதில் மட்கும். |
| நெல் | **அறுவடைப் பருவம்** | நெல் பயிரில் தற்போது நிலவும் வானிலையால் கதிர் நாவாய் பூச்சி வர வாய்ப்புள்ளது. எனவே விவசாயிகள் வயலை நன்கு கண்காணித்து தாக்குதல் தென்பட்டால் குயினல்பாஸ் 1.5டி என்ற மருந்துபொடியினை தூவவும் (அ) 5 சத வேப்பங்கொட்டைச்சாறினைத் தெளிக்க வேண்டும். |
| கரும்பு | நிலம் தயாரித்தல் | தற்போது நிலவும் வானிலையால் முன் பட்ட கரும்பில் தண்ணீர் தேவை அதிகரிக்க வாய்ப்புள்ளது. எனவே மண்ணின் ஈரத்தை பொறுத்து இளம் பயிருக்க நீர் பாய்ச்சலாம். மேலும் பயிர் மூடாக்கு செய்வது உகந்ததாக இருக்கும். மறுதாம்பு பயிராக இருந்தால் கரும்பு தோகையை இயந்திரம் கொண்டு பரப்பி விடுவதன் மூலமும் நீர் ஆவியாவதை குறைக்கலாம்.<br>வறண்ட வானிலை நிலவுவதால் கரும்பில் இளங்குருத்து புழு வர வாய்ப்புள்ளது. எனவே விவசாயிகள் அடிக்கடி தண்ணீர் பாய்ச்சி வயலை நன்கு ஈரமாக வைத்துக்கொள்வதன் மூலம் இந்த தாக்குதலை குறைக்கலாம். மேலும் பயிர் மூடாக்கு செய்வதன் மூலமும் இந்த தாக்குதல் குறைவதோடு மட்டும் அல்லாமல் நீர் தேவையையும் குறைக்கலாம். |
| கொடி வகை காய்கறிகள் | | கொடி வகை காய்கறி பயிரில் பெண் பூக்களை அதிகரிக்க எத்ரல் 100 பிபிஎம் அதாவது 10 லிட்டர் தண்ணீரில் 1மில்லி கலந்து 15 நாட்கள் இடைவெளியில் நான்கு அல்லது ஐந்து முறை நிலத்தில் போதுமான ஈரம் இருக்கும் பட்சத்தில் தெளிக்க வேண்டும். |
| வாழை | | தற்போது நிலவும் வானிலையால் வாழையில் சிக்காடாக்கோ இலைப்புள்ளி நோய் குறிப்பாக மண் ஈரம் அதிகமான இடங்களில் வர வாய்ப்புள்ளது. வந்த இடங்களில் வயலை காயவிட்டு நோய்தாக்கிய இலைகளை பறித்து எரித்து விடவும், மேலும் ஒரு லிட்டர் தண்ணீருக்கு கார்பன்டசிம் 1 கிராம் (அ) புரபிகோனோசோல் 1 மிலி (அ) மாங்கோசெப் 2 கிராம் பூஞ்சாண கொல்லியை மாற்றி மாற்றி உபயோகப்படுத்துவதன் மூலம் நோய் எதிர்ப்புத்தன்மை உருவாவதை தடுக்கலாம். தெளிக்கும் போது ஒட்டும் திரவம் கலந்து தெளிக்க வேண்டும்.<br>வாழையில் சில இடங்களில் வாடல் நோய் காணப்படுகிறது. நோய் அதிகமாக பாதித்திருந்த மரத்தை அகற்றி விட்டு சுண்ணாம்பு இடவும். மேலும் வாழைத்தண்டு 45 டிகிரி கோணத்தில் 10 செ.மீ |

| | | |
|---|---|---|
| | | அல்லது கார்பன்டசிம் 2 சத நீரை 3 மில்லி அல்லது 50 மில்லி கிராம் சூடோமோனாஸ் ப்ளோரோசென்ஸ் உயிர் பூஞ்சான கொல்லியை கொண்டு நிரப்பவும். இந்த முறையை 2, 4 மற்றும் 6 வது மாதங்களில் செய்யவும். கரும்பு ஆலை கழிவு ஒரு மரத்திற்கு 5 கிலோ இடுவது தாக்குதலை குறைக்கும். |

| | | |
|---|---|---|
| மஞ்சள் | கிழங்கு பருக்கும் | மஞ்சள் கிழங்கு உருவாகும் நிலையில் இருப்பதால் மண்ணில் சரியான ஈரப்பதத்தை கண்காணித்து நீர்பாசனம் செய்ய வேண்டும். |
| மரவள்ளி | | தற்போது நிலவும் வானிலையால் மரவள்ளி கிழங்கில் வெள்ளை ஈ தாக்குதல் வர வாய்ப்புள்ளது. எனவே விவசாயிகள் வயலை நன்கு கண்காணித்து தாக்குதல் தென்பட்டால் மஞ்சள் ஒட்டு பொறி வைத்து 5 அல்லது 6 இடங்களில் வைக்கவும். தேவைப்பட்டால் டிரையோசோபாஸ் ஒரு லிட்டர் தண்ணீருக்கு 2 மில்லி வீதம் கலந்து தெளிக்க வேண்டும். |
| தென்னை | | தென்னையில் வெப்ப நிலை உயர்ந்து வருவதால் கருந்தலைப்புழு வர வாய்ப்புள்ளது. ஆரம்பகாலமாக இருந்தால் ப்ரொக்கானிஸ் என்ற ஒட்டுண்ணியை ஏக்கருக்கு 2100 என்ற அளவில் வைக்க வேண்டும். இந்த ஒட்டுண்ணி தென்னை ஆராய்ச்சி நிலையம் ஆழியார் நகரில் கிடைக்கிறது. |
| மா | **பூக்கும் பருவம்** | தற்போது நிலவும் வானிலையால் மாமரத்தில் பூக்களை தாக்கக்கூடிய தத்துப்பூச்சி வர வாய்ப்புள்ளது. ஏனவே விவசாயிகள் மரத்தை நன்கு கண்காணிக்கவும். தேவைபட்டால் 5 சத வேப்பங்கொட்டைச் சாறினைத் தெளிக்க வேண்டும். |
| கால்நடைகள் | | வெப்பநிலை 34$^{\circ}$செ உயர்ந்து வருவதால் கால்நடைகளில் வெப்ப அயற்சி சார்ந்த பிரச்சனைகளை தடுக்க போதிய சுத்தமான தண்ணீருடன் போதிய அளவு பசுந்தீவனங்களையும் சேர்த்துக் கொடுக்க வேண்டும்.<br>இந்த பருவ காலத்தில் அம்மை நோய் கால்நடைகள் மற்றும் கோழிகளில் வரவாய்ப்புள்ளது. ஆதலால் இதற்கு தடுப்பூசி போட வேண்டும்.<br>கோழிப்பண்ணைகளில் வெப்ப அயற்சியை தடுக்க போதிய சுத்தமான தண்ணீர் கொடுக்க வேண்டும். மேலும் காலை மற்றும் மாலை வேளைகளில் தீவனங்கள் கொடுக்க வேண்டும். |

**குறுஞ்செய்தி**

- இந்த பருவ காலத்தில் அம்மை நோய் கால்நடைகள் மற்றும் கோழிகளில் வரவாய்ப்புள்ளது. ஆதலால் இதற்கு தடுப்பூசி போட வேண்டும்.

**முதன்மைஅலுவலர் (GKMS)**
**வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம்**
**த.நா.வே.ப.கழகம், கோவை**